Ponniar anicut at Sornatham

* 458 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether it is a fact that the villages lying on both sides of the river Ponniar in South Arcot district are heavily affected during the floods due to the construction of an anicut across the river at Sornatham without proper flood banks; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

தொப்பையாறு அணைத்திட்டம்.

* **459 வினா—திரு. வீ. செல்லதுரை:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஓமலூர் வட்டத்தில் "தொப்பையாறு" அணைத்திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு பாசனத் தலைமைப் பொறியாளரால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டின் மீது வருவாய் வாரியத்தின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வீ. செல்லதுரை: இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? இந்தத் திட்டத்தை வருகின்ற 1974-75-ம் ஆண்டு பட்ஜெட் திட்டத்தில் அமுல் செய்து, அந்தப் பகுதி மக்களின் மகிழ்ச்சியை நமது அரசு பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வருவாய்த்துறை வாரியத்தின் சிபார்சு கிடைத்த பிறகு, இந்தத் திட்டத்தைப் பற்றி அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும். இந்தத் திட்டத்திற்கு மொத்தம் உண்டாகிற செலவு எவ்வளவு என்கின்ற விவரம் இப்பொழுது என் கையில் இல்லை.